# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2125/47 - 2019 මැයි මස 29 වැනි බදාදා - 2019.05.29

*2125/47 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.பி. 21/1978* (x) *(அ)*

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

*25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ஏ. இபதுல் றவூப் ஹக்கீம் ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும்* PB *4833 என்ற பதிவிலக்கத்தைக் கொண்டதுமான நஷனல் ஸ்கூல் ஒப் பிஸ்னஸ் மனேஜ்மன்ட் லிமிட்டெட் தொடர்பில் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றிருந்து, சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதும் 2018, ஏப்பிறல் 19 ஆந் திகதிய 2067/ 17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளையை அக்கட்டளைக்கான அட்டவணை* I *மற்றும்* II *இனை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் புதிய அட்டவணை* I *மற்றும்* II *இனை பின்வருமாறு இடுவதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.*

**"அட்டவணை I**

*நிபந்தனைகள்*

தேசிய தொழில் முகாமைத்துவப் பாடசாலை லிமிட்டெட், இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்துக்காக மாணவர்களைச் சேர்க்கும்போது,

(i) உட்புற வடிவமைப்பில் இளமாணி தொடர்பில், க. பொ. த. (உயர் தரப்) பரீட்சையில் ஏதேனும் பாடத்துறையில் ஒரே தடவையில் மூன்று (03) 'சாதாரண சித்திகள்' (S) என்ற அல்லது அதற்குச் சமமான குறைந்தபட்ச நுழைவுத் தகைமைக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

(ii) கணினி விஞ்ஞானத்தில் கௌரவ விஞ்ஞான இளமாணி மற்றும் கணினி வலையமைப்பில் கௌரவ விஞ்ஞான இளமாணி தொடர்பில்,

(அ) க. பொ. த. (உயர்தரப்) பரீட்சையில் பௌதிக விஞ்ஞானத் துறையில் ஒரே தடவையில் மூன்று (03) 'சாதாரண சித்திகள்' (S) என்ற அல்லது அதற்குச் சமமான ; அல்லது

(ஆ) குறித்துரைக்கப்பட்ட அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படைப் பாடநெறி ஒன்றுடன் க. பொ. த. (உயர் தரப்) பரீட்சையில் ஏதேனும் பாடத்துறையில் ஒரே தடவையில் மூன்று (03) 'சாதாரண சித்திகள்' (S) கொண்ட, குறைந்தபட்ச நுழைவுத் தகைமைக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

**அட்டவணை II**

| நிரல் I<br>பட்டம் | நிரல் II<br>பட்டத்திற்கான சுருக்கம் |
|---|---|
| உட்புற வடிவமைப்பில் இளமாணி | பிஐஎன்ரிடிஈஎஸ் |
| கணினி விஞ்ஞானத்தில் கௌரவ விஞ்ஞான இளமாணி | பிஎஸ்சி கௌரவ (கணினி விஞ்ஞானம்) |
| கணினி வலையமைப்பில் கௌரவ விஞ்ஞான இளமாணி | பிஎஸ்சி கௌரவ (கணினி வலையமைப்பு) |

ஏ. இபதுல் றவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர்.

கொழும்பு,
*2019, மே 28.*

*06-338*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.